## களுத்துறை பிரதேச சபை
## களுத்துறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 15 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, களுத்துறை பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான களுத்துறை பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

களஞ்சிய இருப்பு விநியோகங்களான ரூபா 8,579,719 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு ஆண்டிற்கான செலவினமாக கணக்கிடப்படுவதற்குப்

பதிலாக ஆண்டிற்கான களஞ்சிய இருப்புக் கொள்வனவான ரூபா 7,685,003 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**-----------------------------------------------------------------**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 56,115,394 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**-----------------------------------------------------**

**2.1 நிதி விளைவுகள்**

**------------------------**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,553,232 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 7,504,642 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

**-------------------------------**

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக விதி) 185 இன் பிரகாரம் சபையின் காசு மீதி தலைவரால் அவ்வப்போது பரீட்சிக்கப்பட வேண்டியதுடன் எளிதில் விடுவிக்கப்படக்கூடிய பணப் பெறுமதி சபையின் ஒருங்கிணைப்புடன் முதலீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,178,737 தொகையான காசு மீதி பொதுக் கணக்கில் காணப்பட்ட போதிலும் இதில் ஒரு பகுதியேனும் முதலீடு செய்யப்படுவதற்குக் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 3,102 | 2,158 | 3,385 |
| (ii) | வாடகை | 110 | 87 | 48 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 713 | 663 | 110 |

### 2.3.2 வீதவரி

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான வீதவரி மீதி ரூபா 3,033,990 ஆகக் காணப்பட்டது. இதில் கொழும்பு வீதியின் இடதுபக்கப் பிரிவிற்கு உரித்தான 121 வீதவரி செலுத்துனர்களிடமிருந்து ரூபா 2,000 இற்கு மேலான நிலுவை மீதியைக் கொண்ட 20 வரிசெலுத்துனர்கள் காணப்பட்டதுடன் நிலுவை மீதி ரூபா 78,405 ஆகக் காணப்பட்டது.

### 2.3.3 வியாபரா வரி, வேலை வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம்

2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான 186 நிறுவனங்களிடமிருந்து ரூபா 181,210 தொகையும், 41 நிறுவனங்களிடமிருந்து வேலை வரி ரூபா 20,780 தொகையும் 38 நிறுவனங்களுக்கு உரித்தான அனுமதிப்பத்திரக் கட்டணமான ரூபா 11,050 தொகையும் கணக்காய்வுத் தினமாகிய 2013 மே 23 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | **ரூபா** |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 33,783,338 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 8,500,000 |

### 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

37 - 9779 ஆம் இலக்க வாகனம் 2007 யூன் 14 ஆம் திகதி முதலும் வீதி பதனிடும் இயந்திரம் 2009 யூலை 29 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படாதும் திருத்தப்படாதும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

### 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபைச் செயலாளரின் தனியார் தொலைபேசி பட்டியலுக்காக 2011 சனவரி முதல் கணக்காய்வுத் தினமாகிய

2013 ஏப்ரல் வரை ரூபா 91,191 தொகை சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**2.6 ஒப்பந்த நிர்வாகம்**

2011 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்தின் கீழ் ரூபா 1,940,000 தொகை நாகொட அட்டவில பொது மயானத்தின் தகனச்சாலையை நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தக்காரருடன் 2011 நவம்பர் 23 ஆம் திகதி உரிய செயற்பாடு ஒரு மாதத்தில் பூர்த்தி செய்யப்படுவதற்கு ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. வேலைக்காக 2011 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 838,315 தொகை பன்முகப்படுத்தப்பட்ட நிதியத்திலிருந்தும் 2012 யூன் 22 ஆம் திகதி ரூபா 525,333 தொகை சபை நிதியத்திலிருந்தும் செலுத்தப்பட்டிருந்தது. 2012 மே 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் பின்வருமாறாகும்.

(அ) வேலை முற்றாக பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தகனச்சாலையின் சுவரை அமைத்து கூரை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் வெளிச்சுவர் மாத்திரம் முற்றாக சாந்து பூசப்பட்டு உட்பக்கத்தில் எட்டு அடி உயரத்தில் சாந்து பூசப்படட போதிலும் சுவர்களில் சிறந்த பூர்த்தி இருக்கவில்லை.

(இ) வேலையின் எஞ்சிய வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த பகுதிகளில் பற்றைகள் வளர்ந்து சேதமுற்றிருந்தன.

**2.7 செயற்பாட்டு / முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சேவையிலிருந்து விலக்கப்பட்ட, இடமாற்றலாகிச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல்

உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 345,570 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் நோக்கும் செயற்பணியும் மேற்கொள்ளப்படுவதற்காக 3 ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் செயல் நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

1988 பிரதேச சபை விதிப் பிரமாணத்தின் 5 ஆம் விதியின் 7 ஆம் உப விதியின் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக போதிய உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வது தலைவரின் செயற்பாடான போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) வாகன கட்டுப்பாடு
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்